# அவர் நமக்கு வேதவசனம் கொடுத்தார்: வியாக்கியானத்தின் அடித்தளங்கள்

**பாடம் 4**

## அர்த்தத்திற்கான அணுகுமுறைகள்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

**முன்னுரை** .......... 1

**புறநிலை** .......... 3

- **பின்னணி** .......... 4
- **தாக்கம்** .......... 6

**அகநிலை** .......... 9

- **பின்னணி** .......... 10
- **தாக்கம்** .......... 12

**உரையாடல் முறை** .......... 15

- **பின்னணி** .......... 16
- **தாக்கம்** .......... 18
- **ஒப்பீடு** .......... 21
  - அதிகார-உரையாடல் மற்றும் புறநிலை அணுகுமுறை .......... 21
  - அதிகார-உரையாடல் மற்றும் அகநிலை .......... 22

**முடிவுரை** .......... 25



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

வேதத்தில் உள்ள ஒரு பகுதியின் அர்த்தத்தைப் பற்றி மக்கள் முரண்படுவதை நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம். பெரும்பாலும், இந்த உரையாடல்கள் ஒரே வழியில் முடிவடைகின்றன. "உங்கள் வியாக்கியானம் உங்கள் கருத்து மட்டுமே" என்று ஒருவர் கூறுகிறார். ஆனால் இன்னொருவர், "இல்லை, இது என் கருத்து மட்டுமல்ல. அது உண்மைதான்" என்கிறார். இந்த கருத்துக்கள் வேதாகம வியாக்கியானத்தில் மிகவும் அடிப்படையான கேள்விகளில் ஒன்றான வேதத்தில் உள்ள ஒரு பகுதியை வாசித்து, அதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி ஒரு முடிவுக்கு வரும்போது, நமது முடிவு ஒரு புறநிலை உண்மையா, அகநிலைக் கருத்தா அல்லது இரண்டிற்கும் இடைப்பட்டதா? என்பதைப் பிரதிபலிக்க உதவுகின்றன.

இது *அவர் நமக்கு வேதம் கொடுத்தார்* என்கிற நமது தொடரின் நான்காம் பாடம் ஆகும்: *வியாக்கியானத்தின் அடிப்படைகள்,* அதற்கு "அர்த்தத்திற்கான அணுகுமுறைகள்" என்று நாம் பெயரிட்டுள்ளோம். இந்த பாடத்தில், வியாக்கியான அறிஞர்கள் வேதாகமத்தின் அர்த்தத்தை அடையாளம் கண்டு விவரித்த சில முக்கிய வழிகளைப் பார்ப்போம்.

வேதத்தில் நாம் காணும் வேத பகுதிகளின் அர்த்தத்தைப் பற்றி நாம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கும்போது, புறநிலை அறிவுக்கும் அகநிலை அறிவுக்கும் இடையே ஒரு அடிப்படை வேறுபாட்டைச் செய்வதன் மூலம் தொடங்க இது உதவும். நாம் படிக்கிறவைகள் என்பது நாம் புரிந்து கொள்ள முயலும் விஷயங்களாகும். இந்த விஷயங்கள் சுருக்கமாகவோ, கருத்துக்களைப் போலவோ அல்லது மனிதர்கள் அல்லது இடங்களைப் போல உறுதியாகவோ இருக்கலாம்.

எடுத்துக்காட்டாக, உயிரியலாளர்கள் விலங்குகள் மற்றும் தாவரங்கள் போன்றவைகளை ஆய்வு செய்கிறார்கள். இசைக்கலைஞர்கள் இசை அல்லது இசைக்கருவிகள் போன்றவைகளைப் படிக்கிறார்கள். இதற்கு நேர்மாறாக, படிக்கிறவர்கள் என்பது படிப்பை மேற்கொள்ளுகிறவர்களைக் குறிக்கும். உயிரியல் துறையில், உயிரியலாளர்களே படிப்பவர்கள் ஆவர். மேலும் இசைத் துறையில், இசைக்கலைஞர்களே படிப்பவர்கள் ஆவர்.

எனவே, நாம் வேதத்தை வியாக்கியானம் செய்யும்போது, நாம்தான் ஆய்வு செய்பவர்கள், ஏனென்றால் நாம்தான் வியாக்கியானம் செய்கிறோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் ஆய்வு செய்வது வேதமாகும், ஏனென்றால் அதைத்தான் நாம் வியாக்கியானம் செய்ய முயற்சிக்கிறோம்.

ஒவ்வொரு வகையான மனித புரிதலும் படிப்பவர்கள் மற்றும் படிக்கப்படுகிறவைகள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது என்பதைக் காண்பது எளிது. ஆனால் அறிவுத் தேடலில் படிக்கப்படுகிறவைகளும் படிப்பவர்களும் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுகின்றன?

படிக்கப்படுகிறவைகள் மற்றும் படிக்கிறவர்கள் குறித்த மூன்று முக்கிய அணுகுமுறைகளைப் பற்றி பேசுவது பெரும்பாலும் உதவியாக இருக்கும். முதலாவதாக, சிலர் புறநிலைவாதம் என்று நாம் அழைக்கும் அணுகுமுறையை நோக்கிச் செல்கிறார்கள். சரியான சூழ்நிலைகளில், பக்கச்சார்பற்ற அல்லது புறநிலை அறிவை அடைய முடியும் என்று புறநிலைவாதிகள் நம்புகிறார்கள். இரண்டாவதாக, மற்றவர்கள் அகநிலைவாதம் என்ற அணுகுமுறையை நோக்கிச் செல்கிறார்கள். நமது அறிவு எப்போதும் நமது தனிப்பட்ட சார்புகளால் பாதிக்கப்படுகிறது, இது பக்கச்சார்பற்ற புறநிலையை சாத்தியமற்றதாக்குகிறது என்று அகநிலைவாதிகள் நம்புகிறார்கள். மூன்றாவதாக, உரையாடல்வாதம் என்று நாம் அழைக்கக்கூடிய ஒரு நடுத்தர தளத்தை சிலர் கண்டறிந்துள்ளனர். இந்த அணுகுமுறை புறநிலை யதார்த்தத்திற்கும் நமது அகநிலை முன்னோக்குகளுக்கும் இடையிலான நிலையான ”உரையாடலை” அல்லது இடைவினையை வலியுறுத்துகிறது.

இந்த மூன்று அணுகுமுறைகளும் வேதாகம வியாக்கியானத்தில் பயன்படுத்தப்பட்டதில் ஆச்சரியமில்லை. எனவே, இந்தப் பாடத்தில் வேதாகமத்தின் அர்த்தத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, கேள்விக்கு பதிலளிக்க முயற்சிப்பதில் அவை ஒவ்வொன்றிலும் கவனம் செலுத்துவோம்: வேத பகுதியின் அர்த்தத்தைப் பற்றிய நமது புரிதல் புறநிலையானதா, அகநிலையானதா அல்லது உரையாடல் சார்ந்ததா?

இந்த பாடத்தில், அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு இந்த மூன்று முக்கிய அணுகுமுறைகளில் ஒவ்வொன்றிலும் கவனம் செலுத்துவோம். முதலில், புறநிலை அணுகுமுறைகளைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, அகநிலை அணுகுமுறைகளைப் பார்ப்போம். மூன்றாவதாக, உரையாடல் அணுகுமுறைகளை ஆராய்வோம். வேதாகமத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு புறநிலை அணுகுமுறைகளை முதலில் தொடங்குவோம்.

# புறநிலை

பல விஷயங்களைப் பற்றிய கருத்துக்களைக் கொண்டவர்களை நாம் அனைவரும் சந்தித்திருக்கிறோம், ஆனால் அவர்கள் நம்புவதை ஆதரிப்பதற்கு போதுமான புறநிலை உண்மைகள் அவர்களிடம் இல்லை. வேதத்தை வியாக்கியானம் செய்யும் போதும் இதே விஷயம் பொருந்தும். பல வேதப் பகுதிகள் எதைக் குறிக்கின்றன என்பது குறித்த கருத்துக்களுக்கு பஞ்சமில்லை, ஆனால் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வியாக்கியானங்களை புறநிலை உண்மைகளின் அடிப்படையில் கூட அடிப்படையாகக் கொள்ள முயற்சிப்பதில்லை. ஒரு வேத பகுதியின் அர்த்தம் இது தான் என்று உறுதிப்படுத்தி அதை அப்படியே விட்டுவிடுகிறார்கள். இந்தப் பிரச்சனையை நாம் அடிக்கடி சந்திக்கும் போது, அது மிகவும் வெறுப்பாக இருக்கும், மேலும் அது வேதத்தைப் பற்றிய புரிதல்களை பெற்றுக்கொள்ள நம்மை ஏங்க வைக்கும், அவை குறைந்தபட்சம் ஓரளவுக்கு புறநிலையானவையாகும்.

ஐரோப்பாவில் பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் இருந்து, புறநிலைவாதம் வேதாகம வியாக்கியானத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சாராம்சத்தில், வேதத்தை பாரபட்சமின்றி வியாக்கியானம் செய்ய முடியும் என்றும், ஒப்பீட்டளவில் உறுதியாக அதன் அர்த்தத்தை அறிய முடியும் என்றும் அறிஞர்கள் நம்புகிறார்கள். வேதத்தை நாம் வியாக்கியானம் செய்யும்போது நமது தனிப்பட்ட சார்புகளையும் கண்ணோட்டங்களையும் அகற்ற முடியும் என்று பெரும்பாலான புறநிலைவாதிகள் வாதிடுவதில்லை. ஆனால் இவை நம்முடைய வியாக்கியானங்களைப் பாதிக்காமல் தடுக்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள், இதன் மூலம் வேதாகமத்தைப் பற்றிய உண்மையான புரிதலை நாம் அடைய முடியும். எடுத்துக்காட்டாக, வேதத்தின் முதல் வசனமான ஆதியாகமம் 1:1 ஐ நாம் அனைவரும் அறிவோம்:

> ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (ஆதியாகமம் 1:1).

இந்தவேத பகுதியின் அடிப்படை அர்த்தத்தை புரிந்துகொள்வது ஒப்பீட்டளவில் எளிதானது என்பதை பெரும்பாலான மக்கள் ஒப்புக்கொள்வார்கள். குறைந்தபட்சம், "தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்" என்பதே இதன் அர்த்தம் என்று நாம் நம்பிக்கையுடன் கூறலாம்.

ஆதியாகமம் 1:1 இன் அர்த்தமானது "தேவன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்" என்று புறநிலைவாதிகள் சொல்லும்போது, அவர்கள் அந்த வசனத்தை பாரபட்சமின்றி புரிந்துகொள்கிறார்கள் என்று நம்புகிறார்கள். எனவே, தங்கள் வியாக்கியானத்தை நிராகரிக்கும் எவரும் ஒரு

வெளிப்படையான உண்மையுடன் உடன்படவில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இப்போது, வேதாகமத்தின் அர்த்தத்தை கண்டுபிடிப்பதற்கு ஏன் பல வேதாகம வியாக்கியான அறிஞர்கள் இந்த அணுகுமுறையைப் பின்பற்றுகிறார்கள்? வேதாகம வியாக்கியானத்தில் புறநிலைவாதத்தின் விளைவுகள் என்ன?

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க, இரண்டு திசைகளில் பார்ப்பதன் மூலம் வியாக்கியானத்திற்கான புறநிலை அணுகுமுறைகளை ஆராய்வோம். முதலில், இந்த அணுகுமுறைகளின் தத்துவ மற்றும் கலாச்சார பின்னணியைத் தொடுவோம். இரண்டாவதாக, வேதாகம வியாக்கியானத்தில் அவற்றின் தாக்கத்தைக் குறிப்பிடுவோம். வியாக்கியானத்திற்கான புறநிலை அணுகுமுறைகளின் பின்னணியைப் பார்ப்பதன் மூலம் தொடங்குவோம்.

## பின்னணி

நவீன மெய்யியலில் புறநிலை வாதமானது அறிவியல் பகுத்தறிவுவாதம் என்று நாம் அழைக்கும் ஒரு காரியத்துடன் அடையாளப்படுத்தப்பட முடியும். 1596 முதல் 1650 வரை வாழ்ந்த ரெனே டெஸ்கார்ட்டஸ், உண்மையின் உச்ச நீதிபதியாக பகுத்தறிவை ஊக்குவித்ததால் நவீன பகுத்தறிவுவாதத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். அவரது பார்வையில், மதம், மரபுகள், நம்பிக்கைகள், உள்ளுணர்வுகள் மற்றும் மூடநம்பிக்கைகள் போன்ற விஷயங்கள் நம் சிந்தனையை குழப்பி புறநிலை யதார்த்தத்தை நம்மிடமிருந்து மறைக்கின்றன. ஆனால் கடுமையான தர்க்கரீதியான சிந்தனையை நம்புவது மனிதர்களை குழப்பத்திலிருந்து விடுவித்து புறநிலை உண்மையைக் கண்டறிய உதவுகிறது என்று டெஸ்கார்ட்டஸ் வலியுறுத்தினார்.

இயற்கை அறிவியலின் வளர்ச்சியால் அறிவியல் பகுத்தறிவும் பாதிக்கப்பட்டது. 1561 முதல் 1626 வரை வாழ்ந்த பிரான்சிஸ் பேக்கன் என்பவர், இயற்பியல் உலகின் ஆய்வுக்கு பகுத்தறிவு, தர்க்கரீதியான சிந்தனையைப் பயன்படுத்தியதால் நவீன அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். உண்மையில், நாம் பெரும்பாலும் ”அறிவியல் முறை” என்று அழைக்கும் ஒழுங்கான, அனுபவ ரீதியான விசாரணை மனித சார்புத்தன்மையைக் கட்டுப்படுத்துகிறது என்ற கருத்தை பேக்கன் ஊக்குவித்தார், இது நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய புறநிலை புரிதலைப் பெற உதவுகிறது.

பதினேழாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை கிட்டத்தட்ட ஒவ்வொரு ஆய்வுத் துறையும் அதன் முன்னோக்குகளை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அறிவியல் பகுத்தறிவு மிகவும் செல்வாக்கு செலுத்தியது. மதம் மற்றும் இறையியல் போன்ற துறைகள் கூட பகுத்தறிவு, அறிவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நிச்சயமாக, பகுத்தறிவு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மற்றும் அறிவியல் கருத்துக்கள் பல நூற்றாண்டுகளாக பல்வேறு வழிகளில் மாறிவிட்டன. ஆனால் புறநிலைவாதத்தின் அடிப்படை அனுமானம் அப்படியே உள்ளது, குறிப்பாக: பகுத்தறிவு அறிவியல் பகுப்பாய்வைப் பின்பற்றுவதன் மூலம், நாம் புறநிலை அறிவை அடைய முடியும்.

இருபதாம் நூற்றாண்டில், நவீன புறநிலைவாதம் கட்டமைப்புவாதம் எனப்படும் ஒரு பரந்த தத்துவ கண்ணோட்டத்தால் உச்சத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. எளிமையாகச் சொல்வதானால், கட்டமைப்புவாதிகள் தாங்கள் படித்த சமூகவியல், கலை, மொழி மற்றும் இலக்கியம் உட்பட அனைத்தையும் பற்றிய முழுமையான புரிதலைப் பெற பகுத்தறிவு மற்றும் அறிவியல் புறநிலையைப் பயன்படுத்த முயன்றனர். இலக்கிய வியாக்கியானத்தில் புறநிலைத்தன்மைக்கான அவர்களின் விருப்பம் மிகவும் தீவிரமானதாக இருந்தது, இதனால் கட்டமைப்புவாதிகள் புறநிலைவாதத்தின் எந்தவொரு கூறுகளையும் அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு கருத்தையும் விலக்கினர். படைப்பாளிகளின் நோக்கங்கள், அசல் வாசகர்களின் தேவைகள் மற்றும் நவீன வாசகர்களின் கருத்துக்கள் பகுத்தறிவு அறிவியல் பகுப்பாய்வுக்கு மிகவும் அகநிலையானவை என்று கருதப்பட்டன. ஆனால் கடுமையான பகுத்தறிவு பகுப்பாய்வானது அவர்கள் வியாக்கியானம் செய்த நூல்களைப் பற்றிய புறநிலை புரிதலை அவர்களுக்கு வழங்க முடியும் என்று கட்டமைப்புவாதிகள் நம்பினார்கள்.

> தேவன் முழு மக்களாக நம்மை சந்திக்கிறார். அவர் நம்முடைய ஒவ்வொரு அம்சத்தையும் உருவாக்கியுள்ளார். இவ்வாறு அவர் நமது மனதையும் உணர்ச்சிகளையும் மற்றும் உணர்வுகளையும் உருவாக்கினார். அவர் எல்லாவற்றையும் உருவாக்கியிருக்கிறார், மேலும் நாம் நம்முடைய முழு இருதயம் மற்றும் ஆத்துமா மற்றும் வலிமை மற்றும் மனதுடன் அன்பாக பதிலளிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார், எனவே இது நம்முடைய ஒவ்வொரு அம்சத்தையும் ஈடுபடவைக்கிறது. எனவே வேதத்தைப் பற்றிய குறுகிய அறிவார்ந்த வாசிப்பும் ஒரு குறுகிய உணர்ச்சி அல்லது உள்ளுணர்வு வாசிப்பும் போதாது. உங்களுக்குள் இருக்கும் அனைத்தோடும் நீங்கள் பதிலளிக்க வேண்டும். அதைத்தான் தேவன் கேட்கிறார். பாவம் நம் மனதையும் உள்ளுணர்வுகளையும் பாதிக்கும் என்பதும் உண்மைதான். எனவே, நாம் ஒரு வகையில் ஒன்றை மற்றதால் திருத்திக்கொள்ளும்படி கர்த்தர் ஏற்பாடு செய்திருக்கிறார். சரி தானே? எனவே, மக்கள் உள்ளுணர்வோடு ஏதோ ஒரு யோசனையில் நாட்டம் கொண்டவர்களாக இருக்கலாம், அவர்கள் ”நேர்மையாக, நான் இதை என் மனதில்

> பயன்படுத்தும்போது, என் உள்ளுணர்வு திருத்தப்பட வேண்டும் என்பதை என்னால் காண முடிகிறது" என்று அவர்கள் வேதத்தை வாசிக்கும்போது கூறுகிறார்கள். அதற்கு நேர்மாறானதும் சரிதானே? சில நேரங்களில் எனக்கு அறிவார்ந்த யோசனைகள் உள்ளன, அது அதை விட பெரியது என்று நான் சொல்ல வேண்டும். ஒருவேளை இந்த யோசனையிலிருந்து விலகி இருப்பது நல்லது, ஏனெனில் இது வேத பூர்வமானது அல்ல என்று உள்ளுணர்வு என்னை எச்சரிக்கும்.
>
> – Dr. வெர்ன் போய்திரெஸ்

அர்த்தத்திற்கான புறநிலை அணுகுமுறைகளின் தத்துவ மற்றும் கலாச்சார பின்னணியைப் பார்த்த பிறகு, புறநிலை அணுகுமுறைகள் வேதாகம வியாக்கியானத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் மீது நம் கவனத்தைத் திருப்புவோம்.

## தாக்கம்

பகுத்தறிவு அறிவியல் புறநிலைவாதமானது வேதாகம வியாக்கியானத்தை இரண்டு அடிப்படை வழிகளில் பாதித்துள்ளது. முதலாவதாக, விமர்சன வேதாகம ஆய்வுகள் என்று அழைக்கப்படுவதற்கு இது நம்மை வழிநடத்தியது. இரண்டாவதாக, இது சுவிசேஷ வேதாகம ஆய்வுகளையும் பாதித்துள்ளது.

விஞ்ஞானம், தொல்லியல் மற்றும் வரலாறு ஆகியவற்றால் பயன்படுத்தப்படும் பகுத்தறிவு விசாரணையின் மூலம் வேதவசனங்களை மதிப்பிடுவதே சிறந்த வழி என்று விமர்சகர்கள் பொதுவாக வாதிடுகின்றனர். வருத்தப்படும் விதமாக, விமர்சன அறிஞர்கள் பெரும்பாலும் இந்த வகையான விசாரணைகளின் வரம்புகளை அங்கீகரிக்கத் தவறிவிடுகிறார்கள், எனவே அவர்கள் வேதவாக்கியங்களின் பல கூற்றுகள் மற்றும் போதனைகளை நிராகரிக்கிறார்கள்.

விமர்சன அறிஞர்களுக்கு மாறாக, சுவிசேஷகர்கள் வேதம் முற்றிலும் உண்மை மற்றும் அதிகாரப்பூர்வமானது என்றும், அனைத்து அறிவியல் கண்டுபிடிப்புகளும் இறுதியில் அதன் போதனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர். அறிவியல், தொல்லியல் மற்றும் வரலாறு ஆகியவற்றிலிருந்து வேதத்தைப் பற்றிய முக்கியமான விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடியாது என்பது இதன் அர்த்தமல்ல. வேதத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு சரியாகப் பயன்படுத்தப்படுமானால்,

பகுத்தறிவு மற்றும் அறிவியல் முறைகள் வேதத்தின் அர்த்தத்தைக் கண்டறிய உதவும் மிகவும் பயனுள்ள கருவிகளாகும். அறிவியல், தொல்பொருள் மற்றும் வரலாற்றுத் தகவல்களைத் தொடர்புபடுத்தும் வேதாகமத்தின் அம்சங்களைப் புரிந்துகொள்ள, இந்தத் துறைகளின் நுண்ணறிவுகள் பெரும்பாலும் நமக்கு உதவுகின்றன. ஆனால் வேதத்தின் கூற்றுகள் மற்றும் போதனைகளை நிராகரிக்க இந்த ஒழுக்கங்கள் ஒருபோதும் பயன்படுத்தப்படக்கூடாது.

> வேதத்தை வாசித்து படிக்கும் ஒவ்வொருவருக்கும் சில வியாக்கியான முறைகள் உள்ளன. நாம் பயன்படுத்தும் முறையைப் பற்றி நாம் உண்மையிலேயே அறிந்திருக்கிறோமா என்பதும், வேதத்தைப் பற்றி நாம் கேட்கும் கேள்விகள் மற்றும் அதற்கான பதில்களை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பது குறித்தும் கவனமாக சிந்திக்கிறோமா என்பது தான் கேள்வியாகும். வேதத்தைப் படிக்கவும் புரிந்துகொள்ளவும் தொடங்கும் நபர்களுக்கு, அவர்கள் படிக்கும் ஒவ்வொரு பத்தியிலும் அவர்கள் கேட்கும் கேள்விகளை, அவர்கள் பின்பற்றத் தொடங்கும் சில வழக்கமான படிப்படியான வழிமுறைகளை வைத்திருக்க நான் மிகவும் ஊக்குவிக்கிறேன். ஆனால் வேதாகம வியாக்கியானம் ஒரு அறிவியல் அல்ல என்று சொல்வது முக்கியம்; மாறாக அது ஒரு கலையாகும். நாம் சரியான கேள்விகளைக் கேட்பது என்பது அல்ல, வேத பகுதியின் முழு அர்த்தத்தையும் நாம் எப்போதும் புரிந்து கொள்ள முடியும். எனவே, காலம் செல்லச் செல்ல, நாம் அடிமைத்தனமான ஒரு முறையை மட்டும் பின்பற்றாமல், வேதத்தின் எந்தவொரு குறிப்பிட்ட பகுதியையும் வியாக்கியானம் செய்வதில் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுக்குத் காத்திருப்பதைக் கற்றுக்கொள்கிறோம் என்று நான் நினைக்கிறேன்.
>
> – Dr. பிலிப் ரைகென்

> வேதாகம வியாக்கியானத்தில் நாம் ஒரு கடுமையான முறையைப் பயன்படுத்தும்போது, அது நம்மை நேர்மையாக இருக்க உதவும். நாம் வேதாகமத்திற்குச் செல்லும்போது சாதாரணமாகவோ அல்லது சரியாகத் தெரிவிக்கப்படாமலோ இருப்பதிலிருந்து நம்மைத் தடுக்கிறது… ஒரு நல்ல வழிமுறை அடிப்படையானது நம் வீட்டுப்பாடத்தைச் செய்ய நம்மைத் தூண்டுகிறது என்று உங்களுக்குத் தெரியும், எனவே அது விடாமுயற்சியையும் கவனத்தையும் வளர்க்கிறது. அதே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சமயத்தில், கடுமையான ஒரு முறையானது சில சமயங்களில் வேதம் சொல்வதைச் சொல்ல அனுமதிக்காமல் போகலாம். இது குறைப்பு வியாக்கியானங்களுக்கு வழிவகுக்கும். இதற்கு எனக்கு பிடித்த உதாரணங்களில் ஒன்று யோவான் 13 இல் உள்ள இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவும் கதையாகும். நம்மில் நிறைய பேர் கற்றுக்கொண்ட தூண்டல் முறையுடன் இதை நீங்கள் அணுகினால், யோவான் 13 இல் இருந்து ஒரு வேலைக்காரனுக்குரிய பாடத்தை மட்டுமே நாம் கற்றுக்கொள்ளுவோம். ஆனால், யோவான் மற்றும் புதிய ஏற்பாட்டு நூற்தொகுப்பு முழுவதிலும் அந்த வேத பகுதியை நான் எவ்வளவு அதிகமாகக் கருதுகிறேனோ, அந்தளவுக்கு, யோவான் 13 உண்மையில் பிலிப்பியர் 2 இல் பவுல் முன்வைக்கும் அதே கதை வளைவின் நாடகமாக்கல் என்று நான் உறுதியாக நம்புகிறேன். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்... ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." இந்த இரண்டு வேத பகுதிகளிலும் முன் மகிமை, சுய-வெறுமை மற்றும் சேவையின் ஒரு கதை வளைவைக் கொண்டுள்ளோம், பின்னர் மீண்டும் மேன்மை வருகிறது. கிறிஸ்துவின் முன் இருப்பு, வெறுமையாக்குதல் மற்றும் உயர்த்தப்படுதலின் கிறிஸ்து இயல் பற்றி பெலிகன் பேசுவது போன்றதாகும். யோவானில் உங்களை அங்கே அழைத்துச் செல்லும் உரைச் சுவடுகள் உள்ளன, ஆனால் அவை நுட்பமானவைகளாகும். எனவே, நாம் வேதத்திற்கு செல்லும்போது, வழிமுறை என்பது ஒரு முடிவுக்கு வழி என்பதை எப்போதும் மனதில் வைத்திருப்பது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். இது ஒரு முடிவு அல்ல, எனவே



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வேதத்தை சரியாகப் புரிந்துகொள்வதே குறிக்கோளாகும். அது தான் எப்போதும் முக்கியமாகும்.
>
> – Dr. கேரி வின்ஸான்ட்

அர்த்தத்தை கண்டுபிடிப்பதற்கான புறநிலை அணுகுமுறைகள் பல வழிகளில் நமக்கு உதவும். வேதத்தைக் கவனமாகவும் பொறுப்புடனும் வியாக்கியானம் செய்வதற்கு நமக்கு உதவக்கூடிய பகுத்தறிவு மற்றும் சரியான வியாக்கியான முறைகளிலிருந்து எடுத்துக்கொள்வதன் பலன் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் வேதாகம வியாக்கியானத்திற்கான இந்த அணுகுமுறை எவ்வளவு மதிப்புமிக்கதாக இருந்தாலும், இறுதியில் தேவன் மட்டுமே அவரது அறிவில் புறநிலையாக இருக்கிறார் என்பதை நாம் எப்போதும் நினைவூட்ட வேண்டும், ஏனென்றால் அவருடைய பார்வையில் இருந்து எதுவும் மறைக்கப்படவில்லை. நாம் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும், மனிதர்கள் ஒருபோதும் முற்றிலும் புறநிலையாகவும் முற்றிலும் பக்கச்சார்பற்ற உண்மைகளை விசாரிப்பவர்களாகவும் இருக்க முடியாது. எனவே, புறநிலை அணுகுமுறைகளின் நன்மைகளை இழக்காமல், வேதாகமத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றிய விரிவான புரிதல் நமக்குத் தேவை.

அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கான புறநிலை அணுகுமுறைகளின் இந்த புரிதலை மனதில் கொண்டு, அகநிலை அணுகுமுறைகளுக்கு நம் கவனத்தைத் திருப்புவோம்.

# அகநிலை

அகநிலை வாதத்தில் பல வகைகள் உள்ளன. ஆனால் பொதுவாக, மனிதர்களும் உலகமும், குறிப்பாக நம்பிக்கை சார்ந்த விஷயங்களும் அறிவியல் பகுத்தறிவுவாதத்தால் பகுத்தறிய முடியாத அளவுக்கு சிக்கலானவை என்பதை அகநிலைவாதிகள் அங்கீகரிக்கிறார்கள் என்று சொல்லலாம். எனவே, அர்த்தத்தை கண்டறிவதற்கான அவர்களின் தேடல் பொதுவாக உள்ளுணர்வு மற்றும் உணர்ச்சிகள் போன்ற தனிப்பட்ட திறன்களை வலுவாக சார்ந்துள்ளது. எடுத்துக்காட்டாக, யோவான் 13:34-35-ல் இயேசு இந்த பழக்கமான போதனையைக் கொடுத்தார்:

> நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுக்கிறேன்: நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார் (யோவான் 13:34-35).

நாம் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்கிற இயேசுவின் கட்டளை ஒரு மட்டத்தில், ஒப்பீட்டளவில் வெளிப்படையானது. ஆனால் அன்பு என்பதைக் குறித்து வெவ்வேறு நபர்களுக்கு மிகவும் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

ஒரு புறநிலைவாதி அன்பு என்றால் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேதாகமத்தைப் பார்ப்பார். ஆனால் ஒரு அகநிலைவாதி அன்பை தனது சொந்த விதிமுறைகளில் வரையறுக்கவும், பின்னர் அந்த வரையறைக்கு ஏற்ப செயல்படவும் அதிக விருப்பம் கொண்டிருப்பார்.

அர்த்தத்தை கண்டறிவற்கான அகநிலை அணுகுமுறைகள் பற்றிய நமது விவாதம் புறநிலை அணுகுமுறைகள் குறித்த நமது விவாதத்தை ஒத்திருக்கும். முதலில், அகநிலை அணுகுமுறைகளின் தத்துவ மற்றும் கலாச்சார பின்னணியைத் தொடுவோம். இரண்டாவதாக, வேதாகம வியாக்கியானத்தில் அவற்றால் ஏற்பட்ட தாக்கத்தில் சிலவற்றைக் குறிப்பிடுவோம். வியாக்கியானத்திற்கான அகநிலை அணுகுமுறைகளின் பின்னணியிலிருந்து தொடங்குவோம்.

## பின்னணி

பதினேழாம் மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டு அறிவொளியின் புறநிலை வாதத்திற்கு விடையிறுப்பாக நவீன அகநிலை வாதம் ஓரளவு முக்கியத்துவம் பெற்றது. 1711 முதல் 1776 வரை வாழ்ந்த ஸ்காட்லாந்தைச் சேர்ந்த டேவிட் ஹியூம் போன்ற தத்துவவாதிகள் பகுத்தறிவும் அறிவியல் ஆய்வும் உலகைப் பற்றிய புறநிலை அறிவுக்கு நம்மை இட்டுச் செல்ல முடியாது என்று வாதிட்டனர். நமது உணர்ச்சிகள், ஆசைகள் மற்றும் மன வகைகள் எப்போதும் நம் சிந்தனையை பாதிக்கின்றன, இது பக்கச்சார்பற்ற புறநிலைத்தன்மையை சாத்தியமற்றதாக்குகிறது என்று ஹியூம் மற்றும் மற்றவர்கள் நம்பினர்.

1724 முதல் 1804 வரை வாழ்ந்த ஜெர்மானிய தத்துவஞானி இம்மானுவேல் காண்ட் அகநிலை சிந்தனைக்கு மகத்தான பங்களிப்பை வழங்கினார். புறநிலை யதார்த்தத்தை நாம் உண்மையிலேயே அறிய முடியாது என்று காண்ட் வாதிட்டார்; நாம் ஒருபோதும் ”ஒரு பொருளை” அறிய முடியாது. உலகம் நமக்கு அதை வெளிப்படுத்தும் விதத்தை மட்டுமே நாம் உணர்கிறோம் என்று அவர் பின்னர் நம் மனதில் ஏற்கனவே இருக்கும் பகுத்தறிவு வகைகள் அல்லது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கருத்துக்கள் மூலம் நமது உணர்வுகளை செயலாக்குகிறோம் என்று அவர் நம்பினார். நாம் பொதுவாக ”உலக அறிவு” என்று அழைப்பது எப்போதும் நமது அனுபவ உணர்வுகள் மற்றும் நமது மன கருத்தாக்கங்கள் இரண்டையும் உள்ளடக்கியது என்று காண்ட் முடிவு செய்தார்.

ஹியூம் மற்றும் காண்ட் ஆகியோருக்குப் பிறகு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் கற்பனை நவிற்சி போன்ற இயக்கங்கள் மூலம் அர்த்தத்தைக் கண்டறிவற்கான அகநிலை அணுகுமுறைகள் தொடர்ந்து வளர்ந்தன. வெளிப்படையான கவிதை, நாடகம், இசை மற்றும் காட்சிக் கலைகள் யதார்த்தத்தைப் பற்றிய புரிதலை வழங்குகின்றன, அவை பகுத்தறிவு, அறிவியல் சொற்பொழிவுகளை விட மிகவும் உயர்ந்தவை என்று கற்பனை நவிற்சியாளர்களும் அவர்களைப் பின்தொடர்ந்தவர்களும் வாதிட்டனர். பகுத்தறிவு ஒரு மனிதாபிமானமற்ற விளைவைக் கொண்டுள்ளது என்றும் அவர்கள் வலியுறுத்தினர், ஏனெனில் இது உள்ளுணர்வு மற்றும் உணர்ச்சி போன்ற முக்கியமான மனித பண்புகளை அவமதிக்கிறது. எனவே, வேத பகுதிகளை வியாக்கியானம் செய்யும்போது வியாக்கியான அறிஞர்கள் தங்கள் தனிப்பட்ட மனித குணாதிசயங்களை நம்பியிருக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிந்தைய கட்டமைப்புவாதம் என்று அழைக்கப்படும் ஒரு இயக்கத்தில் அர்த்தத்தைக் கண்டறிவற்கான அகநிலை அணுகுமுறைகள் மீண்டும் மாறின. பிரெஞ்சு கோட்பாட்டாளர்களான ஜீன்-பிராங்கோயிஸ் லியோடார்ட், ஜாக் டெர்ரிடா, மைக்கேல் ஃபூக்கோ மற்றும் பலர் இருபதாம் நூற்றாண்டின் கட்டமைப்புவாதத்தின் புறநிலைத்தன்மையை நிராகரித்தனர். உண்மையில், பலர் புறநிலைவாதத்திலிருந்து வெகுதூரம் நகர்ந்தனர், அவர்கள் புறநிலைக்கான அனைத்து நம்பிக்கையையும் நிராகரித்தனர். அறிவின் புறநிலை கூற்றுக்களை நம்ப முடியாது என்று அவர்கள் வலியுறுத்தினர், ஏனெனில் அவை மிகவும் வரையறுக்கப்பட்டவையாகவும் அகநிலை பாரபட்சங்கள், உணர்வுகள் மற்றும் இருக்கும் நம்பிக்கைகளால் மிகவும் பாதிக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன.

மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஜெர்மானிய தத்துவஞானியான பிரெடரிக் நீட்சே மற்றும் இருபதாம் நூற்றாண்டின் இருத்தலியல்வாதிகள் பலர் ஆகியோருடன் உடன்பட்டனர், அவர்கள் அறிவிற்கான அனைத்து உரிமைகோரல்களும் முதன்மையாக ஒரு நபர் அல்லது குழுவின் பாரபட்சங்களை மற்றவர்கள் மீது திணிக்கும் முயற்சிகள் என்று கூறினர். கலைசார்ந்த வியாக்கியானம் கூட சமூக மேலாதிக்கத்தை அடைவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு அதிகார நாடகம் என்று வாதிட்டு அவர்களில் சிலர் இந்த கருத்துக்களை கலை மற்றும் இலக்கியத்திற்கும் விரிவுபடுத்தினர்.

நமது காலத்தில், குறிப்பாக கலை மற்றும் இலக்கிய வியாக்கியானத்தில், அகநிலைவாதம் பரவலாகிவிட்டது. நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய புறநிலை புரிதலை நம்மால் கண்டுபிடிக்க முடியாது என்பதால், வேதம் உள்ளிட்ட கலை மற்றும் இலக்கியத்தின் அர்த்தம் நமக்குள் இருக்க வேண்டும் என்று அகநிலை வியாக்கியான அறிஞர்கள் வாதிடுகின்றனர். எனவே, கலை மற்றும் இலக்கியத்தில் புறநிலை அர்த்தத்தைப் பற்றிப் பேசுவதை விட, இசை, ஓவியங்கள், புத்தகங்கள் போன்றவை வெவ்வேறு கலாச்சாரங்கள், வெவ்வேறு இனக் குழுக்கள், வெவ்வேறு பொருளாதார வர்க்கங்கள், வெவ்வேறு பாலினங்கள் போன்றவற்றால் எவ்வாறு பார்க்கப்படுகின்றன என்பதைப் பற்றி அகநிலைவாதிகள் பேசுகிறார்கள். இந்த வெவ்வேறு குழுக்கள் தங்கள் பல்வேறு சமூக நிகழ்ச்சி நிரலுக்கு சேவை செய்ய கலை மற்றும் இலக்கியத்தை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதில் அவர்கள் குறிப்பாக ஆர்வமாக உள்ளனர்.

அர்த்தத்தைக் கண்டறிவற்கான அகநிலை அணுகுமுறைகளின் வரலாற்றுப் பின்னணியை இப்போது நாம் ஆய்வு செய்துள்ளோம், வேதாகம வியாக்கியானத்தில் அவற்றின் தாக்கத்தைக் கருத்தில் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்.

## தாக்கம்

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் தங்களைச் சுற்றியுள்ள கலாச்சாரத்தின் நீரோட்டங்களை அவர்கள் வேதத்தை வியாக்கியானம் செய்யும் விதத்தில் தாக்கத்ததை ஏற்படுத்த அனுமதிப்பதில்லை. ஆனால் உண்மையில், வேதாகம மரபுவழியை அணுகுவதில் கலாச்சாரத்தின் விளைவுகளிலிருந்து நம்மில் எவராலும் முற்றிலுமாக தப்பிக்க முடியாது. சமீபத்திய தசாப்தங்களில், வியாக்கியான அகநிலைவாதம் கல்விசார் விவாதங்களின் வரம்புகளுக்கு அப்பால் நகர்ந்துள்ளது மற்றும் இது சாதாரணமாக மாறிவிட்டது ஆகையால் உண்மையின் கூற்றுக்கள் உண்மையில் தனிப்பட்ட அகநிலைக் கருத்துக்களைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று வலியுறுத்தும் அதிகமான மக்களை நாம் சந்திக்கிறோம். விசுவாசம் மற்றும் வேத விஷயங்களில் இது குறிப்பாக உண்மையாகும். இந்த காரணத்திற்காக, நம் காலத்தில் வேத வியாக்கியானத்தை அகநிலைவாதம் எவ்வாறு பாதித்துள்ளது என்பதைப் பற்றி நாம் அனைவரும் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

பகுத்தறிவு அறிவியல் புறநிலைவாதத்தைப் போலவே, அகநிலைவாதமும் விமர்சன வேத ஆய்வுகள் மற்றும் சுவிசேஷ வேத ஆய்வுகள் இரண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அகநிலைவாதத்தால் தாக்கம் பெற்ற வேத அறிஞர்கள் பெரும்பாலும் வேத பகுதியில் புறநிலை அர்த்தத்தைக்

காண முடியாது என்று வாதிடுகின்றனர். எனவே, வேதாகமத்தின் மூல அர்த்தத்தைக் கண்டுபிடிக்க தங்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குப் பதிலாக, வேதாகமத்தின் வாசகர்கள் தங்கள் சொந்த நோக்கங்களுக்கு ஏற்ப வேதவாக்கியங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தங்கள் சொந்த அர்த்தங்களை உருவாக்க ஊக்குவிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டை எழுதியவர்கள் பழைய ஏற்பாட்டை வியாக்கியானம் செய்தபோது இதைத்தான் செய்தார்கள் என்றும் சிலர் வாதிடுகின்றனர். பழைய ஏற்பாட்டு நூல்கள் புறநிலை அர்த்தத்தில் எதைக் குறிக்கின்றன என்பதைப் பற்றி புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் கவலைப்படவில்லை என்றும், புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் தங்கள் கிறிஸ்தவ நம்பிக்கைகளை மேம்படுத்த பழைய ஏற்பாட்டை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதில் முக்கியமாக அக்கறை கொண்டுள்ளனர் என்றும் அவர்கள் நம்புகின்றனர். நாம் அதையே செய்ய வேண்டும் என்று விமர்சன அகநிலைவாத வியாக்கியான அறிஞர்கள் வாதிடுகின்றனர். வேதாகமத்தின் புறநிலை அர்த்தத்தைப் பற்றி நாம் கவலைப்படக்கூடாது, மேலும் நமது சொந்த சமூக, அரசியல் மற்றும் மத நிகழ்ச்சி நிரல்களை மேம்படுத்த வேதத்தைப் பயன்படுத்த வேண்டும்.

விமர்சன வேதாகம ஆய்வுகளுக்கு மாறாக, சுவிசேஷக வேதாகம ஆய்வுகள் பெரும்பாலும் தீவிர அகநிலை முன்னோக்குகளைத் தவிர்த்துள்ளன. குறைந்தபட்சம் கொள்கையளவில், சுவிசேஷ சபையார் பொதுவாக வேதம் தேவனுடைய வார்த்தை என்பதை ஒப்புக்கொள்கிறார்கள், எனவே அதன் அர்த்தம் வியாக்கியான அறிஞர்களால் அல்லாமல் தேவனால் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் சுவிசேஷ சபையார் வியாக்கியானவியலின் மீது இருக்கிற அகநிலைவாதத்தின் எதிர்மறையான தாக்கத்திலிருந்து விடுபடவில்லை. வேத பகுதியின் புறநிலை அர்த்தத்தைப் பற்றி சிந்திக்காமல் ”இந்த வேத பகுதியைக் குறித்த உங்களுடைய அர்த்தம் என்ன?” என்று அவர்கள் அடிக்கடி கேட்கிறார்கள். போதகர்களும் வேதாகம ஆசிரியர்களும் வேதத்தின் வரலாற்று அமைப்பைப் பற்றி கவலைப்படாமல், சமகால ஆர்வங்களை வேத பகுதிகளில் திணிக்கும் நோக்கில் பெரும்பாலும் வேதத்தை வாசிக்கின்றனர்.

ஆனால் இது போன்ற பிழைகள் இருந்தபோதிலும், அகநிலைவாதம் இன்னும் சுவிசேஷ வேதாகம மரபுவழிக்கு மதிப்புமிக்க பங்களிப்பை வழங்கியுள்ளது. நம்முடைய கலாச்சார மற்றும் தனிப்பட்ட பின்னணிகள், திறன்கள், பலவீனங்கள் மற்றும் வரம்புகள் வேதாகமத்தைப் பற்றிய நமது புரிதலை கணிசமாக பாதிக்கின்றன என்பதை அது சரியாக சுட்டிக்காட்டியுள்ளது. வேதாகமத்தை எழுதுவதற்கு ஏவப்பட்ட மனித எழுத்தாளர்களின் அகநிலை கண்ணோட்டங்களை பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தியதைப் போலவே, வேதாகமத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவும் பயன்படுத்தவும் நமக்கு உதவுவதற்கு அவர் நமது சொந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அகநிலை கண்ணோட்டங்களைப் பயன்படுத்துகிறார் என்பதைக் காண இது நமக்கு உதவியது.

> வேதம் எப்பொழுதும் நம்மிடமிருந்து ஒரு தனிப்பட்ட பதிலை எதிர்பார்க்கிறது. விசுவாசிப்பதற்கான வாக்குத்தத்தங்களையும், பின்பற்ற வேண்டிய எச்சரிக்கைகளையும், கீழ்ப்படியும்படியான கட்டளைகளையும் வேதம் எப்போதும் நமக்குக் கொடுக்கிறது. எனவே தேவனுடைய வார்த்தையானது எப்போதும் ஒரு தனிப்பட்ட பதிலை நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறது. தேவன் தம்முடைய வார்த்தையில் நம்மோடு பேசுகிறார். "இந்த வேத பகுதி எனக்கு என்ன உணர்வை கொடுக்கிறது?" அல்லது "இந்த வேத பகுதிக்கு எனது தனிப்பட்ட பதில் என்ன?" என்பது தான் மிக முக்கியமான கேள்வி என்பதைப் போல, வேதத்தை வியாக்கியானம் செய்வதில் நாம் தொடங்கும் இடம் அதுவல்ல என்பதை அங்கீகரிப்பது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். நமது சமகாலச் சூழலில் வேதம் நமக்காக வைத்திருக்கும் முழு அர்த்தத்தையும் பெறுவதற்கு முன்பு வேதம் அதன் அசல் சூழலில் எதைக் குறிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே வேதத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு கடினமாக உழைப்பது முக்கியம், பின்னர் நாம் தனிப்பட்ட பதிலுக்குச் செல்ல விரும்புவதால் அதோடு நிறுத்தக்கூடாது. ஆனால் இவை இரண்டும் வேதத்தை வியாக்கியானம் செய்யும் செயல்பாட்டில் முக்கியமானவையாகும்.
>
> – Dr. பிலிப் ரைகென்

வேதத்தின் வெவ்வேறு வியாக்கியானங்களை மதிப்பீடு செய்வதற்கான தரநிலையை நமக்கு விட்டுச்செல்லும்போது அர்த்தத்திற்கான அகநிலை அணுகுமுறைகள் தீங்கு விளைவிக்கும். எளிமையான உண்மை என்னவென்றால், வேதாகமத்தின் சில வியாக்கியானங்கள் மற்றவைகளை விட சிறந்தவையாகும். ஆனால் வேதாகம வியாக்கியானத்திற்கான அகநிலை அணுகுமுறைகள் நமது பின்னணிகள், ஆளுமைகள், நமது உள்ளுணர்வுகள் மற்றும் நமது உணர்ச்சிகள் வேதாகமத்தின் நமது வியாக்கியானங்களை பெரும்பாலும் பாதிக்கும் வழிகளுக்கு நம் கண்களைத் திறக்கலாம். இந்த தாக்கங்களை அங்கீகரிப்பது அவற்றை மிகவும் திறம்பட நிர்வகிக்க உதவும், இதனால் நாம் வேதத்தை மிகவும் பொறுப்புடன் வியாக்கியானம் செய்ய முடியும்.

இப்போது அர்த்தத்திற்கான புறநிலை மற்றும் அகநிலை அணுகுமுறைகளை நாம் ஆராய்ந்துள்ளோம், இப்போது உரையாடல் அணுகுமுறைகளுக்கு நம் கவனத்தைத் திருப்புவோம்.

# உரையாடல் முறை

ஏதோ ஒரு நேரத்தில், ஒவ்வொருவரும் தங்களுடன் முழுமையாக உடன்பட வேண்டும் என்று வலியுறுத்தும் ஒரு விஷயத்தைப் பற்றி வலுவான கருத்துக்களைக் கொண்டவர்களை நாம் அனைவரும் சந்தித்திருக்கிறோம். இப்போது, பல முறை நாம் அவர்களுடன் சேர்ந்து அமைதியை நிலைநாட்டுகிறோம். ஆனால் மற்ற நேரங்களில் கையில் உள்ள பிரச்சனை மிகவும் முக்கியமானதால், அதைப் பற்றி அதிகம் பேச வலியுறுத்துகிறோம். இது போன்ற ஒரு நல்ல உரையாடலில், இருவரும் தங்களை தெளிவாக வெளிப்படுத்தவும், ஒருவரையொருவர் கவனமாக கேட்கவும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்வார்கள். உரையாடல் தொடரும் போது, ஒரளவு ஒருமித்த கருத்து உருவாகும் என்று நம்புகிறோம். சமீபத்திய தசாப்தங்களில், இந்த வகையான பேச்சு அல்லது உரையாடல் வேதம் உட்பட அனைத்து இலக்கியங்களையும் வியாக்கியானம் செய்வதற்கான ஒரு மாதிரியாக மாறியுள்ளது.

"டயலாஜிக்கல்" என்று தமிழில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்ட ஆங்கில சொல் வாசகனுக்கும் வேத பகுதிக்கும் இடையிலான ஒரு வகை உரையாடல் அல்லது விவாதத்தை உள்ளடக்கியது என்ற கருத்தைக் குறிக்கிறது. இதன் அடிப்படை கருத்து என்னவென்றால், வேத பகுதிக்கு ஒரு புறநிலை அர்த்தம் உள்ளது, ஆனால் இந்த புறநிலை அர்த்தமானது வாசகருக்கும் வேத பகுதிக்கும் இடையிலான அகநிலை தொடர்பு அல்லது உரையாடல் மூலம் சிறப்பாக கண்டறியப்படுகிறது. சங்கீதம் 119:18-ல் இப்படிப்பட்ட உரையாடலுக்கு ஒரு உதாரணத்தைக் காண்கிறோம், அங்கே சங்கீதக்காரர் தேவனிடம் பின்வருகிற இந்த வேண்டுகோளை வைத்தார்:

> உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும் (சங்கீதம் 119:18).

இந்த சங்கீதத்தில், சங்கீதக்காரர் வேதவசனத்தில் தவறாமல் பேசிய விதத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். மேலும் அவர் வியாக்கியானம் குறித்த அடிப்படையிலேயே முரண்பாடான கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினார். முதலாவதாக, நியாயப்பிரமாணத்தில் புறநிலை அர்த்தத்தைக் காணலாம் என்று அவர் நம்பினார். ஆனால் அதே நேரத்தில்,

நியாயப்பிரமாணத்தை சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஒரு அகநிலையான, கண்களைத் திறக்கும் அனுபவம் தேவை என்பதை அவர் உணர்ந்தார்.

தனது அகநிலை தாக்கங்களை அகற்றுமாறு சங்கீதக்காரர் தேவனிடம் கேட்கவில்லை, மாறாக அவரது நுண்ணறிவை அதிகரிப்பதன் மூலம் அவரது அகநிலை கண்ணோட்டத்தை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். இந்த வசனத்தின் பரந்த பின்னணி நமக்குக் காட்டுவது போல, சங்கீதக்காரர் தனது புரிதலை மேம்படுத்துவதற்காக நியாயப்பிரமாண உரைக்குத் திரும்பினார்; அவர் வேதாகமத்துடன் ஒரு உரையாடலைப் பராமரித்து வந்தார், அது அந்த வேத பகுதியின் அர்த்தத்தைப் பற்றிய புரிதலை தொடர்ந்து மேம்படுத்தியது.

புறநிலை மற்றும் அகநிலை அணுகுமுறைகளைப் பற்றிய நமது பரிசீலனையைப் போலவே அர்த்தத்தைக் கண்டறிவதற்கான உரையாடல் அணுகுமுறைகள் பற்றிய நமது ஆய்வும் தொடங்கும். முதலில், உரையாடல் மாதிரிகளின் தத்துவ மற்றும் கலாச்சார பின்னணியைப் பார்ப்போம். இரண்டாவதாக, வேதாகம வியாக்கியானத்தின் மீதான அவற்றின் தாக்கத்தைப் பற்றி ஆராய்வோம். ஆனால் ஒருபுறம் புறநிலை மற்றும் அகநிலை அணுகுமுறைகளுக்கு இடையிலான ஒப்பீட்டையும் மறுபுறம் உரையாடல் அணுகுமுறை பற்றிய வேதாகம புரிதலையும் வழங்குவதன் மூலம் நாம் இன்னும் ஒரு படி மேலே செல்வோம். உரையாடல் அணுகுமுறைகளின் பின்னணியைப் பார்ப்பதன் மூலம் தொடங்குவோம்.

## பின்னணி

தத்துவ வியாக்கியானவியல் துறையில், 1768 முதல் 1834 வரை வாழ்ந்த ஜெர்மானிய தத்துவஞானியும் இறையியலாளரும் வியாக்கியான அறிஞருமான பிரெட்ரிக் ஷ்லீயர்மேக்கர் என்பவரால் வியாக்கியானத்தின் உரையாடல் தன்மை வலியுறுத்தப்பட்டது. வியாக்கியான அறிஞர்கள் வேத பகுதிகள் அல்லது பிற சிக்கலான விஷயங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் ”வியாக்கியான வட்டம்” என்று அழைக்கப்படும் ஒரு பிரபலமான வியாக்கியான மாதிரியை அவர் வழங்கினார். ஒரு பொருளை நாம் சந்திக்கும் போது வட்டம் தொடங்குகிறது, முதலில் அது நம் மனதில் செயலாக்குகிறது. பின்னர் நாம் மீண்டும் மீண்டும் ஒரு பொருளைச் சந்திக்கவும் அதிகமாக அதைப் புரியவும் செய்கிறோம். ஷ்லீயர்மேக்கரின் வியாக்கியான வட்டம் பெரும்பாலும் மற்றவர்களால் ஒரு வியாக்கியான சுழல் என்று விவரிக்கப்படுகிறது, இது வியாக்கியான அறிஞர்களுக்கும் அவர்களின் ஆய்வுப் பொருட்களுக்கும் இடையிலான ஒரு வட்ட இயக்கம் ஆகும், இது படிப்படியாக அதிக புரிதலை நோக்கி நகர்கிறது.

அறிவியலிலும் உரையாடல் மாதிரிகள் தோன்றியுள்ளன. 1922 முதல் 1996 வரை வாழ்ந்த தாமஸ் குன் போன்ற இருபதாம் நூற்றாண்டின் அறிவியல்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தத்துவவாதிகள், அறிவியல் அறிவு புறநிலை யதார்த்தத்திற்கும் அறிவியல் ஆய்வுக்கு நாம் கொண்டு வரும் புரிதலின் முன்னுதாரணங்களுக்கும் இடையிலான தொடர்புகளிலிருந்து விளைகிறது என்று வாதிட்டுள்ளனர். ஒரு முன்னுதாரணத்தின் அடிப்படைக் கருத்து என்னவென்றால், நமது நம்பிக்கைகள் அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அவை ஒரு சிக்கலான கட்டமைப்பில் ஒன்றாக பொருந்துகின்றன, ஒவ்வொன்றும் மற்றவைகளை வலுப்படுத்தவும் தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்கின்றன. ஒரு புதிய நம்பிக்கை நமது முன்னுதாரணத்திற்கு சவாலாக இல்லாத வரை, அதை ஏற்றுக்கொள்வது நமக்கு எளிதானதாகும். ஆனால் நமது முன்னுதாரணத்தின் கட்டமைப்பை அச்சுறுத்தும் புதிய நம்பிக்கைகளை நாம் எதிர்க்கிறோம். அப்படியிருந்தும், நமது முன்னுதாரணங்களுக்கு முரணான சான்றுகள் போதுமானதாக இருக்கும்போது, சில நேரங்களில் , நமக்குத் தெரியும் என்று நாம் நினைத்த அனைத்தையும் மறுபரிசீலனை செய்ய காரணமாகிற புரட்சிகர வழிகளில் அது நம்மை மாற்ற நிர்ப்பந்திக்கலாம். ஆனால் மாற்றத்தின் அளவைப் பொருட்படுத்தாமல், நமது மன முன்னுதாரணங்களுக்கும் புறநிலை யதார்த்தத்தின் நமது அனுபவத்திற்கும் இடையில் ஒரு வகையான உரையாடல் எப்போதும் நடக்கிறது, இது நம் ஒவ்வொரு நம்பிக்கைகளையும் மற்றவைகளின் வெளிச்சத்தில் மறுமதிப்பீடு செய்ய தொடர்ந்து காரணமாகிறது.

1900 முதல் 2002 வரை வாழ்ந்த ஹான்ஸ்-ஜார்ஜ் கடாமரின் மாதிரி தான் இருபதாம் நூற்றாண்டில் வியாக்கியானவியலில் மிகவும் செல்வாக்கு மிக்கதாக இருந்தது. அறிவியல், தத்துவம், இறையியல், கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் இரு எல்லைகளின் இணைப்பின் அடிப்படையிலான அர்த்தம் பற்றி கடாமர் பேசினார். கடாமரின் சிந்தனையில், அடிவானம் என்பது ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடிய அல்லது புரிந்து கொள்ளக்கூடிய அனைத்தும் ஆகும். வியாக்கியானவியலைப் பொறுத்தவரை, ஒரு அடிவானம் வேத பகுதியாக இருக்கும். அதன் அடிவானத்தில் வேதபகுதியில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து முன்னோக்குகளும், அந்த கண்ணோட்டங்களிலிருந்து பெறக்கூடிய நியாயமான முடிவுகளும் அடங்கும். இன்னொரு அடிவானம் வாசகர்களுடையது. இந்த அடிவானத்தில் அவர்களின் கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள், உணர்வுகள், பாரபட்சங்கள் மற்றும் பல அடங்கும். வாசகர்கள் வேதபகுதியினுடைய அடிவானத்தின் அம்சங்களை தங்கள் சொந்த அடிவானத்தில் இணைக்கத் தொடங்கியபோது இந்த எல்லைகள் ஒன்றிணையும். வாசகர்கள் வேத பகுதியிலிருந்து கற்றுக் கொள்ளும்போது, அல்லது வேத பகுதியின் கண்ணோட்டங்களை ஏற்றுக்கொள்ளும்போது, வேத பகுதியின் அடிவானத்திலிருந்து புதிய கூறுகளைச் சேர்க்க அவர்களின் சொந்த அடிவானம் விரிவடையும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இப்போது நாம் உரையாடல் மாதிரிகளின் பின்னணியைப் பார்த்தோம், வேதாகம வியாக்கியானத்தின் மீதான அவற்றின் தாக்கத்தைப் பற்றி இப்போது பார்ப்போம்.

## தாக்கம்

இந்த கட்டத்தில் நம்முடைய நோக்கங்களுக்காக, வேதாகமத்தின் வியாக்கியானங்களை மேம்படுத்த சுவிசேஷ சபையார் அர்த்தத்தைக் கண்டறிவதற்கான உரையாடல் அணுகுமுறைகளைப் பயன்படுத்திய சில வழிகளில் நம்முடைய விவாதத்தை மையப்படுத்துவோம். குறிப்பாக, வேதத்தைப் படிப்பது ஒரு சாதாரண புத்தகத்துடன் உரையாடுவதை விட வேறுபட்டது என்று சுவிசேஷ சபையார் வலியுறுத்தியுள்ளனர், ஏனெனில் மற்ற புத்தகங்களைப் போலல்லாமல், வேதாகமம் நம் மீது முழுமையான அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இந்த காரணத்திற்காக, இந்த விஷயங்களுக்கான சுவிசேஷ அணுகுமுறைகளை அதிகார-உரையாடல்களாகப் பேசுவோம்.

ஒரு சாதாரண நாளில், நம்மில் பெரும்பாலானோர் வெவ்வேறு வகையான மக்களுடன் உரையாடுகிறோம். இந்த உரையாடல்கள் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து வெவ்வேறு திசைகளில் செல்கின்றன. நாம் அனைவரும் புரிந்து கொள்ளும் ஒரு விஷயத்தைப் பற்றி நம் நண்பர்களுடன் சாதாரணமாகப் பேசும்போது, நாம் ஒருவருக்கொருவர் சமமாக தொடர்புபடுத்துகிறோம். உரையாடல் முன்னும் பின்னுமாக செல்கிறது, நாம் அனைவரும் கேட்க முயற்சிக்கிறோம், நாம் அனைவரும் பிறரின் கண்ணோட்டங்களை மதிக்க முயற்சிக்கிறோம். ஆனால் நம் உடல்நலம் அல்லது குழந்தைகளை வளர்ப்பது போன்ற முக்கியமான விஷயங்களைப் பற்றி நாம் உரையாடும்போது, நம்மை விட அதிக அறிவு மற்றும் நிபுணத்துவம் கொண்ட ஒருவருடன் இதை பேசும்போது, உரையாடலை வித்தியாசமாக அணுகுவது புத்திசாலித்தனமாகும். வல்லுநர்கள் தவறுகள் செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்தாலும், அவற்றைக் கவனமாகக் கேட்க நம்மால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம்.

ஆனால் இப்போது, நீங்கள் ஒருபோதும் தவறு செய்யாத ஒருவருடன் உரையாடுகிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். உங்கள் கேள்விகள் மற்றும் கருத்துகளுடன் நீங்கள் நிச்சயமாக அந்த உரையாடலுக்கு வருவீர்கள், ஆனால் அந்த நபர் உங்களிடம் கூறும் அனைத்தையும் புரிந்துகொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்வீர்கள்.

பல வழிகளில், வேதத்தை வியாக்கியானம் செய்வது அப்படித்தான் இருக்கிறது. நம்முடைய கேள்விகள் மற்றும் நமது கருத்துக்களுடன் வேதத்திற்கு வருவதை நம்மால் தவிர்க்க முடியாது, ஆனால் வேதம் தவறு

செய்ய முடியாதது என்பதாலும், அது எப்போதும் சரியானது என்பதாலும், அது நமக்குச் சொல்லும் அனைத்தையும் புரிந்துகொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் நம்மால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம்.

வேதத்தை வியாக்கியானம் செய்வது என்பது நாம் கற்பனை செய்து பார்க்கக்கூடிய அதிகாரப்பூர்வ நபரான தேவனுடன் உரையாடுவதைப் போன்றதாகும். இது ஒரு உரையாடல் ஆகும், ஏனென்றால் இது வாசகர்களுக்கும் வேதாகமத்திற்கும் இடையிலான ஒரு வகையான ”கொடுக்கல் வாங்கலை” உள்ளடக்கியதாகும். உரையாடலின் வாசகர் பக்கத்தில், நாம் அனைவரும் பல கேள்விகள், முன்கருத்துக்கள், கலாச்சார பின்னணிகள் மற்றும் தனிப்பட்ட அனுபவங்களுடன் வேதத்திற்கு வருகிறோம். இந்த விஷயங்கள் ஒவ்வொன்றும் வேதத்திலிருந்து நாம் புரிந்துகொள்வதை பாதிக்கின்றன. உரையாடலின் வேதாகமத்தின் பக்கத்தில், தேவன் தொடர்ந்து தம்முடைய வார்த்தையின் மூலம் நம்முடன் பேசுகிறார், சில நேரங்களில் நாம் நம்புவதை உறுதிப்படுத்துகிறார், சில நேரங்களில் அதை திருத்துகிறார்.

> நான் வேதத்தை வாசிக்கும்போது என் பின்னணி, கடந்த காலத்திலிருந்து என் அனுபவங்கள் ஆகியவற்றை இயல்பாக வியாக்கியானம் செய்து அந்த சொற்களில் அவைகளை நினைத்துப் பார்க்கிறேன். விஷயம் என்னவென்றால், நான் வேதத்திற்கு வரும்போது, அதைச் செய்ய வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். என் பின்புலம் முதலியவை தான் நான் வேதத்தைக் கேட்க எனக்கு உதவுகிறது. ஆனால் அதை வேதத்திற்கு சமர்ப்பிக்கும் முழு நோக்கத்துடன் நான் வருகிறேன். நான் வேதத்தின் முன் தாழ்மையுடன் வருகிறேன், என் சொந்த அனுபவங்களை அதன் முன் கொண்டு வருகிறேன். ஆமாம், அது வேத பகுதியைப் புரிந்துகொள்ள எனக்கு உதவுகிறது, ஆனால் ”என் பதில்கள் சரியானதா? வேதம் அதன் அர்த்தத்தை உறுதிப்படுத்துகிறதா அல்லது திருத்துகிறதா?”என்று நான் அதை திருப்பிச் சமர்ப்பிக்கிறேன். எனவே நான் தொடர்ந்து திரும்பி வந்து வேத பகுதியைப் பார்க்கிறேன், அதைக் கேட்கிறேன், அதற்கு முன் காத்திருக்கிறேன், அதைப் புரிந்துகொள்கிறேன், அதன் பரந்த சூழலில் அதைப் பார்க்கிறேன், வேதாகமத்தின் வசனத்திற்கு இணங்க, தேவன் என்ன சொல்கிறார் என்பதற்கு இணங்க எனது பதில்கள் எங்கு மறுவடிவமைக்கப்பட வேண்டும் என்பதைப் பார்க்கிறேன். நிச்சயமாக, அவர்கள் வேதத்திற்கு எவ்வளவு அதிகமாக இணங்குகிறார்களோ, அந்த அளவுக்கு நான் வேதத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> நன்றாகப் புரிந்துகொள்கிறேன். நான் வேதத்தை எவ்வளவு நன்றாகப் புரிந்துகொள்கிறேனோ, அந்த அளவுக்கு என் பதில்களை வேதாகமத்திற்குக் கொண்டு வரவும், அவை வேதத்தால் வடிவமைக்கப்படவும் முடிகிறது.
>
> – Dr. கேரி காக்கரில்

வேதத்தின் அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது, அதிலிருந்து ஞானம், போதனை மற்றும் ஊக்கத்தைப் பெறுவோம் என்று எதிர்பார்க்கிறோம். ஆவியானவர் தம்முடைய விருப்பப்படி, வேதாகமத்தின் உண்மையான அர்த்தத்தை நமக்கு மேலும் மேலும் புரிய வைப்பார் என்றும், அதை நம் வாழ்க்கையில் இன்னும் உண்மையாகப் பயன்படுத்த நமக்கு உதவ முடியும் என்றும் நாம் நம்புகிறோம். ஆகவே, வேதத்தை நாம் எவ்வளவு பொறுப்புடன் படித்துப் புரிந்துகொள்கிறோமோ, அந்த அளவுக்கு நம்முடைய புரிதல் சரியாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். மேலும் நமது ஆவிக்குரிய வரங்கள் வலுப்படுத்தப்படலாம், நமது சிந்தனை சவால் செய்யப்படலாம், நமது கலாச்சார பின்னணிகள் மதிப்பிடப்படலாம் மற்றும் நமது தனிப்பட்ட அனுபவங்கள் மாற்றப்படலாம்.

> வேதாகமத்தின் அதிகாரத்திற்கு நாம் அடிபணிவது முக்கியம், ஏனென்றால் அவ்வாறு செய்வது தேவனுடைய அதிகாரத்திற்கு அடிபணியும் மனப்பான்மையை பிரதிபலிக்கிறது. தேவனுடைய வார்த்தைகளாக, வேதத்தின் அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது அல்லது கீழ்ப்படியாதபோது, தேவனிடம் நம் மனப்பான்மையைப் பற்றி நாம் சிலவற்றைச் சொல்கிறோம் என்று அர்த்தமாகும். ஆகவே, நாம் வேதவாக்கியங்களுக்கு நியாயாதிபதியாக வராமல், அவைகளுடைய அதிகாரத்திற்குக் கீழே வர வேண்டும் என்பதில் கவனமாக இருக்க விரும்புகிறோம், ஏனென்றால் நாம் முதலில் தேவனுடைய அதிகாரத்திற்குக் கீழே வருகிறோம்.
>
> – Dr. ராபர்ட் ஜி. லிஸ்டர்

இப்போது நாம் உரையாடல் மாதிரிகளின் பின்னணியையும் வேதாகம வியாக்கியானவியலின் மீதான அவற்றின் தாக்கத்தையும் கருத்தில் கொண்டுள்ளோம், புறநிலை மற்றும் அகநிலை அணுகுமுறைகளுடன் அர்த்தத்தைக் கண்டறிவதற்கான உரையாடல் அணுகுமுறையின் ஒப்பீட்டைப் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# ஒப்பீடு

அர்த்தத்தைக் கண்டறிவதற்கான புறநிலை மற்றும் அகநிலை அணுகுமுறைகள் சில அடிப்படை வழிகளில் ஒன்றையொன்று எதிர்க்கின்றன, ஆனால் அவை பொதுவான மிக முக்கியமான ஒன்றைக் கொண்டுள்ளன. உச்சத்தில், இரண்டு மாதிரிகளும் இறுதியில் வியாக்கியான அறிஞர்களின் அதிகாரத்தை வேதத்தின் அதிகாரத்திற்கு சமமாகவோ அல்லது அதைவிட அதிகமாகவோ ஆக்குகின்றன. நமது பகுத்தறிவு மற்றும் அறிவியல் பூர்வமான புறநிலைக் கருத்துக்கள் எவ்வளவு நம்பகமானவை என்பதை புறநிலைவாதம் மிகைப்படுத்த முனைகிறது. நமது தனிப்பட்ட உள்ளுணர்வுகள் மற்றும் கருத்துக்கள் எவ்வளவு நம்பகமானவை என்பதை அகநிலைவாதம் மிகைப்படுத்த முனைகிறது. ஆனால் இரண்டு சந்தர்ப்பங்களிலும் முடிவு ஒன்றுதான்: வேதத்தை நாம் நியாயம் தீர்க்கிறோம். எனவே, இந்த அணுகுமுறைகள் சில பயனுள்ள நுண்ணறிவுகளை வழங்கினாலும், நமது சொந்த பலவீனங்களையும் வேதத்தின் தெய்வீக அதிகாரத்தையும் இன்னும் போதுமான அளவு சமாளிக்க ஒரு உரையாடல் மாதிரி நமக்கு உதவுகிறது.

இந்த பாடத்தில், அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு நாம் முதன்மையாக உரையாடல் அணுகுமுறைகளை விட சுவிசேஷ அதிகார-உரையாடல் அணுகுமுறைகளில் கவனம் செலுத்துகிறோம். எனவே, நம்முடைய ஒப்பீடு முதலில் அதிகார-உரையாடல் மற்றும் புறநிலை மாதிரிகளிலும், இரண்டாவதாக அதிகார-உரையாடல் மற்றும் அகநிலை மாதிரிகளிலும் கவனம் செலுத்தும். அதிகார உரையாடல் மற்றும் புறநிலை அணுகுமுறைகளிலிருந்து தொடங்குவோம்.

## அதிகார-உரையாடல் மற்றும் புறநிலை அணுகுமுறை

புறநிலை மாதிரிகளைப் போலவே, ஒரு அதிகார-உரையாடல் மாதிரியும் வேத பகுதியில் புறநிலை உண்மையைக் காணலாம் என்பதை ஒப்புக்கொள்கிறது. வேதாகமம் தேவனுடைய வார்த்தையும் வெளிப்படுத்துதலும் ஆகும், அது சொல்லும் அனைத்தும் புறநிலை உண்மையாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கின்றன. இந்த முறைகள் வேதாகம நியமங்களுக்கு இணங்கும் வரை இந்த வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ள வியாக்கியான முறைகள் நமக்கு உதவும். 2 தீமோத்தேயு 2:15-ல் பவுல் தீமோத்தேயுவிடம் இவ்வாறு கூறினார்:

> நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு (2 தீமோத்தேயு 2 : 15).

இங்கே, சத்திய வார்த்தையைக் கையாள சரியான வழி இருக்கிறது என்று பவுல் சுட்டிக்காட்டினார். இந்த சரியான வழியை அவர் ஒரு தொழிலாளியின் உழைப்புடன் ஒப்பிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. வேதத்தை வாசிப்பதற்கு கவனமான படிப்பும் பொறுப்பான வழிமுறையும் தேவை என்பது அவரது கருத்தாகும். இந்த முறைகள் போதுமானதாக இருக்காது. ஆனால் அவை இன்னும் பொறுப்பான வியாக்கியானத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.

ஒரு அதிகார-உரையாடல் மாதிரியானது இந்த ஆரோக்கியமான கண்ணோட்டங்களை வியாக்கியான புறநிலைவாதத்துடன் பகிர்ந்து கொள்ளும் அதே வேளையில், இது புறநிலைவாத தீவிரங்களுடன் தொடர்புடைய சில கடுமையான ஆபத்துகளையும் தவிர்க்கிறது. வேதாகமத்தை அணுகும்போது நம்மில் எவரேனும் முற்றிலும் புறநிலையாக இருக்க முடியும் என்று நினைக்கும் அபாயத்தைத் தவிர்க்க இது நமக்கு உதவுகிறது. இதை விட, பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான ரீதியான தீர்ப்புகள் எப்போதும் வேதாகமத்தின் அதிகாரத்திற்கு அடிபணிந்து பார்க்கப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ள ஒரு அதிகார-உரையாடல் அணுகுமுறை நமக்கு உதவுகிறது.

ஒரு அதிகார-உரையாடல் அணுகுமுறை புறநிலை மாதிரிகளுடன் எவ்வாறு ஒப்பிடுகிறது என்பதைப் பார்த்த பிறகு, அதிகார-உரையாடல் மற்றும் அகநிலை மாதிரிகளுக்கு இடையிலான நம்முடைய ஒப்பீட்டிற்குத் திரும்புவோம்.

## அதிகார-உரையாடல் மற்றும் அகநிலை

அதிகார-உரையாடல் மாதிரியானது சில வழிகளில் புறநிலை மாதிரிகளை ஒத்திருப்பதைப் போலவே, இது அகநிலை மாதிரிகளுடன் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது. வேதாகம வசனங்களை நாம் வியாக்கியானம் செய்யும் விதத்தைப் பாதிக்கும் கண்ணோட்டங்கள் மற்றும் நம்பிக்கைகளுடன் நாம் அனைவரும் வேதாகமத்திற்கு வருகிறோம் என்பதை அது ஒப்புக்கொள்கிறது. மேலும், நாம் வியாக்கியானத்திற்குக் கொண்டுவரும் தனிப்பட்ட, அகநிலை உள்ளீடு மதிப்புமிக்கது என்பதை வேதாகமம் மற்றும் அகநிலைவாதத்துடன் அது ஒப்புக்கொள்கிறது.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை தியானிப்பது, தேவனின் சத்தியத்தை முழு இருதயத்தோடு தேடுவது, வேதாகமத்தில் தேவன் வெளிப்படுத்தியதைக் காண கண்களைத் திறக்கக் கோருவது, மகிழ்ச்சி மற்றும் கீழ்ப்படிதல் மனப்பான்மையுடன் வேதத்தை அணுகுவது, தேவனுடைய நல்ல ஈவு என்பதால் பிரமாணத்தை நேசிப்பது, வேதத்திற்குக் கீழ்ப்படிவதற்கான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உறுதிமொழிகளை எடுப்பது போன்ற அகநிலைக் கருத்துக்களை வேதாகமம் திரும்பத் திரும்ப வலியுறுத்துதல் ஆகியவை சங்கீதம் 119-ல் தேவனுடைய அதிகாரப்பூர்வ வார்த்தையுடனான நமது உரையாடலின் இன்னும் பல அகநிலை அம்சங்களாகும். ஒரே ஒரு உதாரணமாக, சங்கீதம் 119:97 யைக் கவனிக்கவும்:

> உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்!
> நாள் முழுதும் அது என் தியானம் (சங்கீதம் 119:97).

இந்த வசனத்தில், தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மீதான தனது தனிப்பட்ட அன்பு வேதத்தைப் படிப்பதையும் புரிந்துகொள்வதையும் பாதித்தது என்று சங்கீதக்காரர் சுட்டிக்காட்டினார். வேதாகமத்தை தியானம் செய்வது பற்றி அவர் எழுதினார். இது ஒரு கடுமையான வழிமுறையின் ஒரு பகுதியாக இல்லாத ஒரு அகநிலை நடைமுறையாகும். அவர் தனிப்பட்ட முறையில் வேத வார்த்தைகளைப் பிரதிபலித்தார் மற்றும் அவரை ஒளியூட்ட பரிசுத்த ஆவியானவரை எதிர்பார்த்தார் என்பதைக் குறிக்கிறது.

ஆனால் அதிகார-உரையாடல் அணுகுமுறையானது அகநிலை மாதிரிகளுடன் இது போன்ற ஒற்றுமைகளைப் பகிர்ந்து கொண்டாலும், இது முக்கியமான வழிகளில் அவைகளிடமிருந்து வேறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, சில அகநிலைவாதிகளைப் போலல்லாமல், அதிகார-உரையாடல் மாதிரியானது, வேதாகமத்தின் அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படியாவிட்டால், வேதத்தைப் பற்றிய நமது வியாக்கியானங்கள் கடுமையாகத் தடுக்கப்படும் என்று எச்சரிக்கிறது. 2 பேதுரு 3:16 போன்ற இடங்களில் பேதுரு பவுலின் எழுத்துக்களைப் பற்றி இவ்வாறு பேசினார்:

> தன் நிருங்கள் அனைத்திலும் இப்படித்தான் எழுதுகிறார், இந்த விஷயங்களைப் பற்றிப் பேசுகிறார். அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டுகிறது போலத் தங்களுக்குக் கேடுவரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள் (2 பேதுரு 3:16-16).

மாறாக, பவுலின் எழுத்துக்களில் உள்ள *சில* விஷயங்களைப் ”புரிந்துகொள்வது கடினம்” என்று பேதுரு சொன்னார். ஆனால் அறியாமை மற்றும் ஆவிக்குரிய நிலையற்ற தன்மை காரணமாக சில வாசகர்கள் இந்த சிரமங்களை கடந்து வேலை செய்யத் தவறிவிடுகிறார்கள் என்றும் அவர் கூறினார். இந்த அகநிலை தோல்விகளின் விளைவாக, அவர்கள் அடிபணியாமல் வாசிக்கிறார்கள், பவுலின் எழுத்துக்களின் அர்த்தத்தை சிதைக்கிறார்கள்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நம்முடைய அதிகார-உரையாடல் மாதிரி சுட்டிக்காட்டுவது போல, வேதத்தை ஆராய்வது என்பது வேதாகமம் நம்மை மாற்றும் ஒரு வாழ்நாள் செயல்முறையாகும், இது நமது கிறிஸ்தவ விசுவாசத்தில் நம்மை வளரவும் முதிர்ச்சியடையவும் செய்கிறது. நாம் வேத வியாக்கியான முறைகளை பொறுப்பான வழிகளில் பயன்படுத்தி முதிர்ச்சியடையும் போது, அதிகார-உரையாடல் மாதிரியானது வேதத்தின் புறநிலை அர்த்தத்தைப் பற்றிய நமது புரிதலை அதிகரிக்கும். இது, மேலும் தனிப்பட்ட, அகநிலை வளர்ச்சியை ஏற்படுத்துகிறது, மேலும் செயல்முறை தொடர்கிறது. இவ்வாறாக, வேதத்துடனான நமது உரையாடலை அதிகாரப்பூர்வ வேத பகுதிக்கும் வாசகருக்கும் இடையில் மீண்டும் மீண்டும் வட்டமிடும் ஒரு சுழல் என்று கருதலாம். இந்த சுழலில் நமது ஈடுபாட்டின் குறிக்கோளானது வேதாகம நூல்களின் அர்த்தத்திற்கு மிக நெருக்கமாக செல்வதாகும். எல்லாம் சரியாக நடந்தால், இந்த சுழல் எவ்வளவு திருப்பங்களை ஏற்படுத்துகிறதோ, அந்த அளவுக்கு அது இறுக்கமாகி, வேதாகமத்தின் உண்மையான அர்த்தத்தை நெருங்குகிறது.

இந்த உரையாடலை வெற்றி பெறச் செய்வது எது? நாம் குறிப்பிட்டுள்ளபடி, அதற்கு நிச்சயமாக நம்மிடமிருந்து கடின உழைப்பு தேவைப்படுகிறது. ஆனால் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் வேதவாக்கியங்களை அதிக புரிதலுக்கும் பயன்பாட்டிற்கும் நகர்த்தாவிட்டால் நமது முயற்சிகள் பயனற்றவையாகும். ஆவியானவருடைய ஊழியத்தின் காரணமாக, நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் உண்மையாக ஒப்புக்கொடுக்கும்போது, வேதத்தை வியாக்கியானம் செய்வதற்கான நமது திறன் அதிகரிக்கும் என்று நம்பலாம்.

> அதை எவ்வாறு புரிந்துகொள்வது என்பது என்று நீங்கள் வேதத்தை உங்கள் சொந்த உலகக் கண்ணோட்டத்துடனும் சொந்த கருதுகோளுடனும் அணுகுகிறீர்கள். ஆனால் நீங்கள் ஜெபத்துடன் வேத பகுதியுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டால், அது வேத பகுதி உங்களை நெருங்கவும் வேதபகுதியின் உண்மையான அர்த்தத்தை ஆழமாக புரிந்துகொள்ளவும் ஒரு சுழலில் இட்டுச் செல்லும். எனவே, கதை அல்லது விஷயம் என்னவென்றால், நீங்கள் வேத பகுதியுடன் எவ்வளவு அதிகமாக ஜெபத்துடன் தொடர்புகொள்கிறீர்களோ, அந்த வேத பகுதி உங்கள் சொந்த கண்ணோட்டத்தையும் புரிதலையும் பாதிக்கும், மேலும் அந்த வேத பகுதியில் ஜீவனுள்ள தேவனுடைய உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள நீங்கள் நெருக்கமாக வருவீர்கள்.

– Dr. P. J. பைஸ்

# முடிவுரை

இந்த பாடத்தில், வியாக்கியான அறிஞர்கள் பல நூற்றாண்டுகளாக எடுத்துக்கொண்ட அர்த்தத்திற்கான பல்வேறு அணுகுமுறைகளை நாம் ஆய்வு செய்துள்ளோம். வேதாகமத்திற்குள் மட்டுமே அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முனையும் புறநிலை அணுகுமுறைகள், அதன் வாசகர்களின் கண்ணோட்டங்களில் வேதாகமத்தின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முனையும் அகநிலை அணுகுமுறைகள் மற்றும் உரையாடல் அணுகுமுறைகள் - குறிப்பாக அதிகாரப்பூர்வ வேதாகம நூல்களுடனான தொடர்புகளின் மூலம் வாசகர்கள் அர்த்தத்தை அணுகுகிறார்கள் என்று கூறும் அதிகார-உரையாடல் அணுகுமுறை ஆகியவற்றை நாம் பார்த்தோம்.

ஏதோ ஒரு காலத்தில், புறநிலைவாதம் மற்றும் அகநிலைவாதத்தின் உச்சங்களுக்குச் செல்லும் மக்களை நாம் அனைவரும் சந்தித்திருக்கிறோம். வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் இந்த இரண்டு அணுகுமுறைகளும் போதுமானதாக இல்லை. வேதம் என்றால் என்ன என்பதைப் பற்றிய நமது புரிதலை நமது குறைபாடுள்ள, அகநிலைக் கண்ணோட்டங்கள் தொடர்ந்து பாதிக்கின்றன என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால் அதே நேரத்தில், வேதம் எதைக் குறிக்கிறது என்பதைக் கேட்கவும், நம்மை ஒப்புக்கொடுக்கவும் நாம் எப்போதும் நல்ல விசுவாசத்துடன் முயற்சிக்க வேண்டும். இந்த வகையான அதிகார-உரையாடலில் வேதத்தை ஈடுபடுத்துவதற்கான நமது முயற்சிகளை பரிசுத்த ஆவியானவர் ஆசீர்வதிக்கும்போது, வேதத்தின் சிறந்த மற்றும் பொறுப்பான வியாக்கியானங்களை நோக்கி நாம் முன்னேற முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.